**கவனிக்க.-** *2015.07.10 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1924 - 2015 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2015.07.17

*1924 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*



# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1126 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1131 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1134 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1138 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1129 | நானாவித அறிவித்தல்கள் | - |



**கவனிக்க.-** *ஊழியர் வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவுச் சட்டமூலம் 2015, மே மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனு கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2015*

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் விலை மனுக்கோரல்கள் 2015.07.27 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனு கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கம்பஹா | மீரிகம | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், இல. 150, கிருல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 | பஸ்யாலை நகருக்கு அருகாமையில் | 2015.08.01 |

***பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :***

*அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மாணி மற்றும் மின்மாணி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுகோரல்கள் அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் - (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2015.07.27 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 05,*
*2015, யூன் 29.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2015**

விலைமனு கோரல்

*கட்டிட உரிமையாளர் தொடர்பாக-*

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

*கட்டிடம் தொடர்பாக-*

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.

3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கையும் :----.
6. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
7. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
8. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/.................... ) :----.
9. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.
10. பிரதான வீதிக்குச் செல்வதற்கு எடுக்கும் நேர அளவு ? :----.
11. நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதா ? விபரம் தரவும் :----.
12. தொலைபேசி வசதி இருப்பின், தொலைபேசி இலக்கம் :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு கோரல் நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

7-605

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

100 தொன்கள் கொண்ட இரண்டு தொகுதி Synchronizes lifting Jacks மின்சார சக்தி இரயில் வண்டிப் பெட்டிகள் தரிப்பிடம் மற்றும் சக்தி இரயில் வண்டிப் பெட்டிகள் தரிப்பிடம் வழங்குவதற்கான கேள்வி

பெறுகை இலக்கம் : SRS/F. 7243

இலங்கை, கொழும்பு 10, தபால் பெட்டி இல. 355, ஒல்கொட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் 100 தொன்கள் கொண்ட இரண்டு தொகுதி Synchronizes lifting Jacks மின்சார சக்தி இரயில் வண்டிப் பெட்டிகள் தரிப்பிடம் மற்றும் சக்தி இரயில் வண்டிப் பெட்டிகள் தரிப்பிடம் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் அவர்களது கேள்விகளை அவர்களினால் அற்றோணித் தத்துவத்தால் அதிகாரமளிக்கப்பட்ட பிரசித்திபெற்ற முகவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

2. 2014, ஓகத்து 4 ஆந் திகதி பி. ப. 2.00 (இலங்கை நேரம்) க்கு கேள்விகள் மூடப்படும்.

3. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகம் அல்லது இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களில் இருந்து 2015, ஓகத்து 3 ஆந் திகதி பி. ப. 3.00 (இலங்கை நேரம்) வரை மீளச் செலுத்தப்படாத பெறுகைக் கட்டணமாக 2,500 ரூபா அல்லது இலகுவாக மாற்றிக்கொள்ளக்கூடிய நாணயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய சமமான தொகை செலுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக இலங்கை, கொழும்பு 10, த. பெ. 355, இலங்கைப் புகையிரதத் தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் பதிவுத்தபாலில் அல்லது கையில் கொண்டுவந்து ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்க முடியும்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகம்,
புகையிரத களஞ்சியத் திணைக்களம்,
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு - 10, இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328.
தொலைநகல் இலக்கம் : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7243

7-852

---

**இலங்கை புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

**Procurement for the Supply of 25,000 Nos. High Friction Composite Brake Blocks to Sri Lanka Railways**

பெறுகை இலக்கம் : SRS/F. 7244

இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, த. பெ. இல. 355, புகையிரத தலைமையலுவலகம், இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் இலங்கைப் புகையிரத சேவைக்கு 25,000 Nos. High Friction Composite Brake Blocks இன் வழங்கலுக்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்கள் ஆகியோரிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். உற்பத்தியாளர்கள் அவர்களுடைய விலைமனுக்களை அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட தர அங்கீகாரம் பெற்ற ஒரு முகவரூடாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2015, ஓகத்து 7 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான 2,500 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவாக மாற்றக்கூடிய வெளிநாட்டு நாணயத்தில் நிகரான தொகையை செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களிலிருந்து 2015, ஓகத்து 6 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, த. பெ. இல. 355, புகையிரத தலைமையகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடியவுடனேயே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம் :-

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

6. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்.
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328.
தொலைநகல் இலக்கம் : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்.

குறிப்பீடு இல.: SRS/F.7244

7-853

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2016

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2016 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2015.08.19 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்களுக்கு மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையெழுத்தொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற கேள்விப்பத்திரங்களும் உரிய காலத்திற்கு பின்பு சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட –

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையானளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்வி பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்வியை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. கள்ளுத் தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் கள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு குத்தகைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய கள்ளுத் தவறணைகளை மீண்டும் 2015.10.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை குத்தகைக்கு விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

பி. எம். பீ. ஜீ. பீ. வீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2015, யூன் 29.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல் - 2016**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி பிரிவில் இல. 20 மாயாவ மற்றும் இல. 7, மாப்பனா வதுர தேர்தல் பிரிவு | கட்டுகஸ்தொட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தொட்டை வீதியும் வட்டாரந்தென்ன சந்திக்கும் இடையிலான பாதை கண்டி மாநகரில் இல. 20 - மாயாவ மற்றும் இல. 7 - மாபனாவதுர தேர்தல் பிரிவில் அமைந்துள்ள பிரதேசம் | மு. ப. 11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2015.08.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

**கள்ளுத்தவறணை குத்தகை கேள்விகளுக்கான வைப்புப்பணம் - 2016**

| | | | |
|---|---|---|---|
| இல. 01 | வட்டபுலுவ | கள்ளுத் தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000 |

7-771/1

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொதுஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : பிளஸ் வன் லங்கா (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 105356
கூட்டிணைப்புத் திகதி : 2015.04.29
பதிவு முகவரி : இல. 253/5, பொல்ஹேன்கொட வீதி, கிருலப்பனை, கொழும்பு 05.

கம்பனிச் செயலாளர்கள்.

7- 668

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : திலினி மேன்பவர் (பிறைவேட்) லிமிடெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 88611
பதிவு முகவரி : மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, 5 ஆம் ஒழுங்கை, இல. 521/60, அனுராதபுரம்

கம்பனிச் செயலாளர்.

7- 812

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பதற்கான அறிவித்தல்

த ஜகன் கியுசைன் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

பதிவிலக்கம் : பிவி 106585
பதிவு அலுவலகம் : இல. 966/சி/2, பன்னிபிட்டிய வீதி, அக்கர அற்ற வத்த, பெலவத்த, தலங்கம தெற்கு, பத்தரமுல்லை.

7- 891

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : நவர எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் இலக்கம் : பீவீ 105255*
*கூட்டிணைப்புத் திகதி : 2015.04.27*
*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி : இல. 65/3, சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 2*

கம்பனிச் செயலாளர்கள்

7-669

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : எக்ரெயின் டெக்னொலஜீஸ் அன்ட் சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் இலக்கம் : பீவீ 105271*
*கூட்டிணைப்புத் திகதி : 2015.04.27*
*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி : இல. 393, யூனியன் இடம், கொழும்பு 2*

கொம்செக்கி (பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

7-670

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : சிமால்சி கெப்பிட்டல் (பீவீரீ) லிமிட்டெட்*
*பதிவு இலக்கம் : பீவீ 106543*
*கூட்டிணைப்புத் திகதி : 2015.06.24*
*பதிவு முகவரி : இல. 160ஏ, பூர்வாராம வீதி, கிருலப்பனை, கொழும்பு 5*

கம்பனிப் பணிப்பாளர்.

7-750

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : டுனாபே சீபுஃட் (பிறைவேட்) லிமிட்டெட்*
*பதிவு இலக்கம் : பீவீ 106007*
*கூட்டிணைப்புத் திகதி : 2015.06.01*
*பதிவு முகவரி : இல. 299, பொத்துவில் வீதி, அக்கரைப்பற்று 1*

7-849

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : பேர லேக் டிவலொப்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்*
*பதிவு இலக்கம் : பீவீ 101646*
*கூட்டிணைப்புத் திகதி : 2015.05.25*
*பதிவு முகவரி : இல. 50, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய, இலங்கை*

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-592

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மட்டக்களப்பு, நாவற்குடா, இலக்கம் 47, மேல் மாடித் தெருவில் வசிக்கும் 515162500V எனும் தேசிய ஆள் அடையாள அட்டையைக் கொண்டவரான திருமதி கமலாதேவி புஷ்பராஜ் ஆகிய நான், இதே விலாசத்தைச் சேர்ந்த 522042267V எனும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தையுடைவருமான ஜோசப் புஷ்பராஜ் என்பவருக்கு வழங்கிய, மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஸ்ரனில்லோஸ் அவர்களால் 2009.12.31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1366 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தினை இத்தால் இரத்துச்செய்யப்பட்டு வெறிதாக்கப்பட்டுள்ளதுடன் ஜோசப் புஷ்பராஜ் என்பவரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவித செயற்பாட்டிற்கும் கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பாளி அல்ல என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

திருமதி கமலாதேவி புஷ்பராஜ்.

7-649

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஜின்தொட்ட விதானகே திலக்றுவன் சமரதுங்க ஆகிய நான், 606 ஆம் இலக்கமும் 2012, மாச்சு 17 ஆந் திகதியுடையதும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எம். ஆர். எம். பி. பெரேரா என்பவரால் முதுன்கொடவில் கையொப்பமிட்டு வெலிவேரிய, ஜுபிலி மாவத்தை, 209/1 ஆம் இலக்க முகவரியிலுள்ள மாலிமகே மதுஷா மிஹிராணி டயஸ் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்பட்டு அத்துடன் இதனகத்துப் பின்னர் எவ்வித செயல் வலுவுமில்லை என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

ஜின்தொட்ட விதானகே திலக்றுவன் சமரதுங்க.

7- 646

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நவர இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 105347
கூட்டிணைப்புத் திகதி : 2015.04.29
கம்பனியின் பதிவு அலுவலக முகவரி : இல. 65/3, சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 2

கம்பனிச் செயலாளர்கள்

7- 667

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாரவில போஸ்ட், தல்வில, "தேமஸ்" எனும் முகவரியில் குடியிருக்கும் குடமன்னகே தொன் எல்ஸ்டன் பெரேரா ஆகிய நான், மாரவில போஸ்ட், தல்வில, "தேமஸ்" எனும் முகவரியில் வசிக்கும் வர்ணகுலசூரிய டொனாடா பெரேரா என்பவருக்கு நாத்தாண்டிய பிரசித்த நொத்தாரிசு பி. என். குணவர்த்தன அவர்களால் 2004, யூலை 16 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11942 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப் பத்திரத்தை 2015, யூன் 30 ஆந் திகதி முதல் எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாசையின் பேரிலும் இரத்துச் செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்கள் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். மேற்படி வர்ணகுலசூரிய டொனாடா பெரேரா என்பவரால் இதன் பிறகு செய்யப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இத்தால் அறியத் தருகிறேன்.

குடமன்னகே தொன் எல்ஸ்டன் பெரேரா.

7-721

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி, பிடகந்த வீதி, மஹய்யாவ, 125 ஆம் இலக்கத்தில் வதியும் மானெல் ஜயவிக்கிரம விஜேதுங்க ஆகிய என்னால் தெலிஜ்ஜவில, அஸ்கிரிய, உடகும்புவத்தவில் வதியும் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 600293240V) பிடதூவ கமகே குணசேன என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு அபேரத்ன பண்டாரவினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப் பட்ட 14310 ஆம் இலக்க மற்றும் 2007.09.04 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவம் இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு இரத்துச் செய்யப்படுகின்றது.

மானெல் ஜயவிக்கிரம விஜேதுங்க.

7-890

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, சியம்பலாபே, சியம்பலாபே வடக்கு, தலுக்கலே, இல. 310/20 ஆம் இலக்க முகவரியில் குடியிருக்கும் மத்தும பண்டாரகே லக்ஷ்மன் பெரேரா (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 612540217V) ஆகிய நான், இலங்கை, தெல்கொட, மீகஹவத்த, உடுபில வீதி, 108/9 ஆம் இலக்க முகவரியில் குடியிருக்கும் மத்தும பண்டாரகே சந்திரா ஜராங்கனி பெரேரா (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 567021300V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு திருமதி எம். ஏ. பி. வீ. முனசிங்க அவர்களால் 2015.03.10 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1447 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச் செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன் மேற்படி அற்றோணி தத்துவம் சார்பாக இன்று தொடக்கம் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

மத்தும பண்டாரகே லக்ஷ்மன் பெரேரா.

7-880

# அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள்

## கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு மற்றும் வெளிநாட்டு குடிவகைக்கான தவறணைகள் குத்தகைக்கு கொடுத்தல் - 2016

*1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டினது வெளிநாட்டுக் குடி வகைகளையும் (தானியங்களைக் கொண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) தவறணைகளில் விற்பனை செய்வதற்கு குத்தகைக்கு கொடுப்பதற்கானதும் அக்காலப்பகுதியில் செயற்படுத்தப்படும் சகல கலால் வரிகளுக்கும் உட்பட்டு 2016 ஆம் ஆண்டிற்குள் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் காணப்படும் கள்ளுத் தவறணைகளினதும் வெளிநாட்டு மதுபான சாலைகளினதும் (தானியங்களைக் கொண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) சில்லறை விற்பனையில் தனியுரிமை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக பிரதேச செயலாளர் ஊடாக 2015.08.12 மற்றும் 2015.08.13 ஆந் திகதிகளில் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட நேரம் வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. (அ) சகல கேள்விப்பத்திரங்களும் இத்தீவின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெறப்படும் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தில் மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.*

*(ஆ) கேள்விப்பத்திரத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப்பணத்தினை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.*

*(இ) பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட கேள்விதாரரின் சொத்துக்கள் உட்பட அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். (கேள்விப்பத்திரம் மற்றும் அத்தாட்சிகளை சமர்ப்பிக்கும்போது கள்ளுத் தவறணை, வெளிநாட்டு மதுபான சாலைகளினது குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்).*

*(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கீழ்வரும் விடயங்களை கேள்விதாரர் கருத்தில்கொள்ள வேண்டும் :-*

(i) *கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்பட்டு கேள்வித் தொகை எழுத்து மூலமாகவும் இலக்கம் மூலமாகவும் குறிப்பிடப்படல் வேண்டும் ;*

(ii) *பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சியாளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிடல் வேண்டும் ;*

(iii) *பத்திரத்தில் திருத்தங்கள் மேற்கொண்டால் அந்த இடத்தில் கையொப்பமும் திகதியும் இடப்படல் வேண்டும் ;*

(iv) *சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர் தமது தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதியையும் கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.*

*மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம், பிணைப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, சொத்து சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயர், இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதிக்கு முன் பிரதேச செயலாளர் அலுவலக கேள்விப்பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்புவதாயின் கொத்மலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.*

*4. அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பி. ப. 2.00 மணிக்கு முன் கேள்விதாரர் பிரதேசசெயலகத்துக்கு சமுகமளிக்க வேண்டும்.*

*5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.*

*6. குறிப்பிட்ட ஏல விற்பனைத் தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன் கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட 3 மாத பிணைப்பணத்தினை கொத்மலை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.*

*மேற்படி வைப்புப் பணம் புஸ்ஸல்லாவ, இலங்கை வங்கியில் உள்ள பிரதேச செயலாளரின் கணக்கில் ஒரு வருட சேமிப்பாக வைப்புச்செய்ய குத்தகைக்காரர் சம்மதிக்க வேண்டும். மேற்படி வைப்பு காசோலையாகவோ அல்லது இலங்கை வங்கி, மக்கள் வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பான காசுக்கட்டளை மூலமாகவோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான முத்திரைக் கட்டணத்தை செலுத்தி குத்தகைக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.*

*7. நியமிக்கப்படும் தவணைக் கட்டணத்தை மாதாந்தம் காசாக செலுத்தக்கூடியவர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதி உடையவர் ஆவர்.*

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

9. ஏதாவது ஒரு தவறணை குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாதவிடத்து கள்ளுத் தவறணை 2015.09.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கும், வெளிநாட்டு மதுபான தவறணை 2015.09.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கும் இந்த நிலையத்தில் குத்தகைக்கு விடப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு விடுவது சம்பந்தமாக இறுதி தீர்மானம் என்னுடையதாகும்.

11. இது தொடர்பான மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. எம். சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2015, யூன் 29.

**அட்டவணை**

| இல. | கள்ளுத் தவறணையின் பெயர் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப்பத்திர பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | கடதொரப்பிட்டியா | கடதொரப்பிட்டிய கிராமம் | 2015.08.12 மு. ப. 10.30 | 1,000.00 |
| 2 | ஓத்தலாவை | தேர்ந்தெடுக்கப்படும் இடத்துக்கு பிரதேச செயலாளரினால் அனுமதி வழங்கப் பட்ட கடிதம் சமர்ப் பிக்கப்பட வேண்டும் | 2015.08.12 மு. ப. 10.30 | 1,000.00 |
| 3 | கட்டுகித்துல | கட்டுகித்துல கிராமம் | 2015.08.12 மு. ப. 10.30 | 1,000.00 |

**வெளிநாட்டுக் குடிவகை தவறணை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பூண்டுலோயா | மேல்க்கடை வீதி, பூண்டுலோயா | 2015.08.13 மு. ப. 10.30 | 3,000.00 |

7-770

---

## கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பிறநாட்டு குடிவகைத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2016

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக பிறநாட்டு குடிவகைகள் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2016 ஆம் ஆண்டினுள் பிறநாட்டு குடிவகைகள் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை

வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2015.08.20 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணபப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்–

(அ) கேள்வி வைப்பு பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் ;

(ஆ) கேள்விதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப்பத்திரத்துடன் முன்வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன்வைக்கும் கேள்விதாரர்களுக்கு மேற்படி பிறநாட்டு குடிவகை தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விதாரரின் சுருக்க கையொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற விண்ணபங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்வி விண்ணப்பப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட–

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தவறணையின் இலக்கமும் பெயரும்'' குறிப்பிடப்பட்டு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விதாரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக, கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பிலிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ''கொடுப்பனவுக்காக'' என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட ''பாதுகாப்பான காசோலை'' என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான அளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்வி பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அவர்கள் ஒவ்வொருவரினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. பிறநாட்டு குடிவகை தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க்கணக்கில் பிறநாட்டு குடிவகைகள் விநியோகிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க பிறநாட்டு குடிவகைகள் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்கவேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு குத்தகைக்கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்படமாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய பிறநாட்டு குடிவகை தவறணைகளை மீண்டும் 2015.09.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

பி. எம். பீ. ஜீ. பீ. வீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2015, யூன் 29.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட பிறநாட்டு குடிவகை தவறணைகளின் பட்டியல்- 2016**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 கொழும்பு வீதி | 1. கண்டி நகரத்தில் இல. 17 யட்டி நுவர மற்றும் இல. 18 கொட்டுகொடல்லை வீதி | கண்டி நகரத்தில் இல. 17 யட்டிநுவர மற்றும் இல. 18 கொட்டு கொடல்ல வாக்கெடுப்பு பிரிவுக்குள் கொழும்பு வீதி மற்றும் காசல் ஹில் வீதி சந்தியிலிருந்து கொழும்பு வீதி, வடுகொடபிட்டிய பாதையில் சந்திக்கு இடைப்பட்ட பகுதி கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 11.00 தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2015.08.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

**பிற நாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை கேள்விகளுக்கான வைப்புப்பணம் - 2016**

இல. 01 பிறநாட்டு குடிவகை தவறணை குத்தகை - ரூபா 5,000.00

7-771/2

# ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வங்கி)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***1167, 1168, 1506, 1569 மற்றும் 1726 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர, கங்கவட்ட கோரளே, வட்டரன் தென்ன 238 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவு வட்டரன்தென்னயில் அமைந்துள்ள வட்டரன்தென்ன எஸ்ட்டேட் என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. பீ. சோமதாச அவர்களால் வரையப்பட்ட 2002 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட 2723 ஆம் இலக்க வரை படத்தில் துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப் பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு (உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். எம். டீ. சில்வா அவர்களால் வரையப்பட்ட 1949 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 33 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வட்டரன்தென்ன எஸ்ட்டேட்டின் மீள் அளவை செய்யப்பட்ட உப பிரிவுகள்) அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக. மேலே கூறப்பட்ட 2723 ஆம் இலக்க வரைபடத் திற்கு அமைய கண்டி காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 24.5பே.)**

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர, கங்கவட்ட கோரளே, வட்டரன் தென்ன, 238 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவு, வட்டரன் தென்னயில் அமைந்துள்ள வட்டரன்தென்ன எஸ்ட்டேட் என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. பீ. சோமதாச அவர்களால் வரையப்பட்ட 2002 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட 2723 ஆம் இலக்க வரை படத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எம். டீ. சில்வா அவர்களால் வரையப்பட்ட 1949 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 33 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டரன் தென்ன எஸ்ட்டேட்டின் மீள் அளவை செய்யப்பட்ட உப பிரிவுகள்) அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக. மேலே கூறப்பட்ட 2723 ஆம் இலக்க வரைபடத் திற்கு அமைய கண்டி காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 10.8பே.)**

3. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவு, யட்டிநுவர, கங்கவட்ட கோரளே, வட்டரன் தென்ன, 238 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவு, வட்டரன் தென்னயில் அமைந்துள்ள வட்டரன்தென்ன எஸ்ட்டேட் என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. பீ. சோமதாச அவர்களால் வரையப்பட்ட 2002 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட 2723 ஆம் இலக்க வரை படத்தில் துண்டு 3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (5 அடி அகலமான பாதை மற்றும் டி-ஈ என குறிப்பிடப்பட்டுள்ள 30 அடி சுற்றுவட்டம்) பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு (அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் ஆர். எம். டீ. சில்வா அவர்களால் வரையப்பட்ட 1949 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 33 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டரன்தென்ன எஸ்ட்டேட்டின் மீள் அளவை செய்யப்பட்ட உப பிரிவுகள்) அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக. மேலே கூறப்பட்ட காணித்துண்டுகளான 1 மற்றும் 3- கீழே விபரிக்கப்படும் காணியின் மீள் அளவை செய்யப்பட்ட உப பிரிவுகளாகும்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட கட்டுகஸ்தோட்டை அல்லது மாபனாவத்துரயில் அமைந்துள்ள மிகச் சரியாக யட்டிநுவர, கங்கவட்ட கோரளே, வட்டரன்தென்னயில் அமைந்துள்ள வட்டரன்தென்ன எஸ்ட்டேட் என அழைக்கப்படும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஆர். எம். டீ. சில்வா அவர்களால் வரையப்பட்ட 1949 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 33 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு மேலே கூறப்பட்ட 33 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய அதிலுள்ள அனைத்தும் அடங்கியது.

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 0பே.)**

4. மேலே கூறப்பட்ட இடத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜே. சீ. ஜோன்கிளாஸ் அவர்களால் வரையப்பட்ட 1943 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 33 ஆம் இலக்க வரைபடத்தில் ஏ-பி எனக் குறிப்பிடப்பட்டுள்ள (13 அடி அகலமும், 107 அடி நீளமும்) பாதை உரிமையுடன் மேலே கூறப்பட்ட வரைபடத்திற்கு அமைய கண்டி காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 1றூ. 35பே.)**

*(கண்டி பிரசித்த நொத்தாரிசு சுஜானி ஹபுதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட 1167 மற்றும் 1168 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 6 ஆந் திகதியிடப்பட்ட 1506 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 1569 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 4 ஆந் திகதியிடப்பட்ட 1726 ஆம் இலக்க பிணை உறுதி ஆகியன மூலம் கண்டி ஹன்தான டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் எனும் பெயரில் பங்குடமை வியாபாரத்தை மேற்கொண்டு வரும் கண்டியில் வசிக்கும் ஏக்கநாயக்க முதியன்சேலாகே ரஞ்ஜித் அனுர விஜேசிங்க மற்றும் மல்லிகா அப்புஹாமிலாகே ஷர்தா பெரேரா ஆகியோரால் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீக்கு (முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 6 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 79,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீயின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

7-675

---

**கொமர்சியல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (சிலாபம் கிளை)**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை-தொட்டமுனை, பாணந்துறை-தல்பிட்டி தெபத்த, பாணந்துறை நகரசபை எல்லையில் பட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கட்டிட இலக்கம் 5 (புதிய இலக்கங்கள் 11டி மற்றும் 11டி/1, தெசெவ மாவத்தையில் அமைந்துள்ள நிலஅளவையாளர் பி. எல். டி. பெர்னாந்து அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டு செத்தெம்பர் 21 ஆந் திகதியுடைய வரைபட இல. 2699 இல் காட்டப்பட்ட கல்கடவத்தை காணியின் லொட் 1, அங்குள்ள கட்டிடங்கள் எல்லாம் சேர்த்து**

***(விஸ்தீரணம் : 0ஏ. 1று. 4.7பே.)***

*(கடன் எடுத்த பாணந்துறை தேசவே மாவத்தை, 13 ஆம் இலக்க பதிவு விலாசத்தில் அமைந்துள்ள இலங்கை கம்பனிகள் சட்டப்படி அமைக்கப்பட்ட மக் குணசேகர கிரியேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த யுண்மெரிணா சீமன்ஹேவகே மங்களிக்கா குணசேகர மேற்படி காணியை கொமர்சியல் பேங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. க்கு ஈடுவைத்துள்ளார்.)*

மேற்படி சொல்லப்பட்ட காணி 2015, ஓகத்து 10 ஆந் திகதிய மு. ப. 10.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 2014.07.04ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலன்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் விற்பனை அறிவித்தலுக்காக 2015.07.17 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2015.07.20 ஆந் திகதியிட்ட ''லக்பிம'', ''த ஐலன்ட்'', ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்**.- பாணந்துறை மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து கொழும்பு-காலி பிரதான றோட், 7 ஆவது குறுக்கு றோட்டில் 75 மீற்றர் பிரதான றோட்டை அடைந்து வலது பக்கம் திரும்பி 75 மீற்றர் சென்று தேசசேவ மாவத்தையில் 75 மீற்றர் சென்ற பிறகு காணியை அடைய முடியும் (கட்டிட இலக்கம் 11, ரண்கொத் வியாபார கட்டிடம்).

**கொடுப்பனவு செய்யும் முறை**.- வெற்றி பெற்ற கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01% ;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2.5% ;
(4) நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) வெட் வரி.

மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்சியல் பேங்க் ஒப் சிலோன் பி. எல்.சி. பிரதான அலுவலகம் அல்லது பாணந்துறை கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு.- முகாமையாளர், கொமர்சியல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 575சீ, காலி றோட், பாணந்துறை. தொலைபேசி இல. : 038-2235643 ; தொலைநகல் இல. : 038-2235648.

எல். பி. சேனாநாயக்க,
சமாதான நீதவான்,
சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதாரரர்,
விலை மதிப்பீட்டாளர்கள் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200, 2ஆம் மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி /தொலைநகல் இல. : 011 2445393.

7-803

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.